செய்தி வெளியீடு எண்:786 நாள்:26.09.2021

**செய்திக்குறிப்பு**

**ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் நடைபெறும் பணிகள் குறித்து மாண்புமிகு ஒன்றிய உணவு பதப்படுத்துதல் துறை மற்றும் ஜல் சக்தி இணை அமைச்சர் திரு பிரகலாத் சிங் பட்டேல் அவர்களின் ஆய்வு**

தமிழ்நாட்டில் 2 நாட்கள் சுற்றுப்பயணமாக இன்று (26.09.2021) சென்னை வந்த மாண்புமிகு ஒன்றிய உணவு பதப்படுத்துதல் துறை மற்றும் ஜல் சக்தி இணை அமைச்சர் திரு. பிரகலாத் சிங் பட்டேல் அவர்களை தமிழக அரசின் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்கள். இந்த சந்திப்பில், தமிழக அரசின் முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப, நிர்வாக இயக்குநர், TWAD போர்டு, திரு. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர், திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப, கூடுதல் இயக்குநர், திரு. செ. சரவணன், இ.ஆ.ப, தலைமை பொறியாளர் மற்றும் TWAD போர்டு மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்கள் உடன் தூய்மை பாரத இயக்கம் – ஊரகம் (Swachh Bharat Mission – Grameen) மற்றும் ஜல் ஜீவன் இயக்கத்தின் (Jal Jeevan Mission) முன்னேற்றம் குறித்து ஆலோசனை செய்தனர்.

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், தமிழ் நாட்டில் உள்ள 12,525 ஊராட்சிகளைச் சார்ந்த 79,395 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள சுமார் 1 கோடியே 27 இலட்சம் வீடுகளில் இதுவரை 46.33 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரசுப்பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசுக்கட்டிடங்களுக்கு 100% குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

பாராட்டினார். மேலும் இக்குடிநீர் இணைப்புகளை உரியமுறையில் பராமரித்து பாதுகாக்கபட்ட குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய அறிவுறுத்தினார்கள்.

இத்திட்டத்திற்கான குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்திடவும், பாதுகாக்கவும் மற்றும் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கினார். மேலும் அனைத்து வீடுகளுக்கும் படிப்படியாக தனி கிராம திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலமாக குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கினார்.

மக்களின் சுகாதார வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் தமிழகத்தின் ஊரக பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள், திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை முற்றிலும் ஒழித்திட தனி நபர் கழிப்பறைகள் மற்றும் சமுதாய வளாகங்கள் கட்டி மக்களை பயன்படுத்த ஊக்குவித்தல் போன்ற செயல்பாடுகள் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.366.58 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ், ஊரக பகுதிகளில் திட மற்றும் திரவக்கழிவுகளை திறம்பட மேலாண்மை செய்திட எதுவாக பற்பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை குறிப்பிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டினார். மக்களிடையே சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், நெகிழி கழிவுகள் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9